# அரசு கலைக்கல்லூரியில் சாகித்ய அகாடமி கருத்தரங்கம்



**உடுமலை, நவ. 17–**

சாகித்ய அகாடமி, உடுமலை அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறை சார்பில் 'தமிழ் நாவல்க ளின் சமகாலப் போக்குகள்' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

அக்கல்லூரியில் நடந்த கருத்தரங்கிற்கு, காந்தி கிராம கிராமியப்பல்கலையின் தமிழ்த்துறை பேராசிரியர் ஆனந்தகுமார், தலைமை வகித் தார். கல்லூரி முதல்வர் (பொறுப்பு) ராமலிங்கம் வரவேற்றார்.

நான்கு அமர்வுகளாக கருத்தரங்கம் நடத் தப்பட்டது. கோவை குமரகுரு கலை கல்லூரி பேராசிரியர் வேணுகோபால், மதுரைக்கல்லூரி பேராசிரியர் ரத்தினகுமார், கோவை பி.எஸ். ஜி., கல்லூரி பேராசிரியர் ராமராஜ் ஆகியோர் பேசினர்.

குறிப்பாக, தமிழ் நாவல்களில் மார்க்சியம்', 'தமிழில் புலம்பெயர் நாவல்கள்', 'தமிழ் நாவல் களில் சுற்றுச்சூழலியல்', 'தமிழ் நாவல்களில் பின் நவீனத்துவம்' ஆகிய தலைப்புகளில் உரை நிகழ்த்தப்பட்டது.

தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெற்றது. பல்வேறு கல்லூரிகளைச்சேர்ந்த பேரா சிரியர்கள், மாணவ, மாணவியர் கலந்து கொண் டனர். பேராசிரியர்கள் வேலுமணி, அபுபக்கர், மதியழகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.